[25th September 1956

Madras Police dogs

* 224 *Q.*—Sri N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that Police dogs had been lent to the Mysore Government during June 1956 for the investigation of a murder case at Bangalore; and

(*b*) if so, whether any charge has been paid by the Mysore Government for the services of the dogs?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir.

Mr. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—STATEMENT UNDER RULE 40 *RE* THE COLLECTION OF PENAL WATER-CESS IN THE LOWER BHAVANI PROJECT AREA.

Mr. SPEAKER : I have received notice under Rule 40 of the Assembly Rules from hon. Members Sri K. R. Nallasivam and Sri K. T. Raju calling the attention of the Minister for Revenue to a matter of urgent public importance, namely, the hardship caused in the collection of penal water-cess in the area irrigated under the Lower Bhavani Project. Sri K. R. Nallasivam will now speak.

10–05 a.m. Sri K. R. **NALLASIVAM** : கனம் சபாநாயகர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்னால் லோயர் பவானி பிரதேசத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டதற்காக பலவிதமான தண்டத் தீர்வை போடப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக சில சட்டசபை அங்கத்தினர்களும் நானும் மற்றும் விவசாயிகளும் மந்திரிமார்களிடத்திலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் போடப்பட்டிருக்கக்கூடிய அநியாய தண்டத் தீர்வையை ரத்து செய்யவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமென்று சொல்லப்பட்டிருந்தபோதிலும், இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதைப் புரிந்துகொள்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன, அதனால்தான் தாமதம் ஏற்படுகிறது என்று எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

நெல் வைக்கக்கூடாத இடங்களில் நெல் பயிரிட்டதற்காக தண்டத் தீர்வை போடப்படுகிறது. நீர்க்கசிவு இல்லாத இடங்களில் நெல் வைத்தாலும் அதற்கும் தண்டத் தீர்வை போடப்படுகிறது. நடைமுறையில் பார்க்கும்போது கிராம அதிகாரிகளின் தயவு இருந்தால் அது நீர்க்கசிவு உள்ள நிலம் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதிகாரிகளின் தயவு இல்லாவிட்டால் அது நீர்க்கசிவு உள்ள நிலம் என்று ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. மேலதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக்கொண்டால், அதன் பேரில் யாதொரு நடவடிக்கையும் எடுப்பதில்லை.

அடுத்தப்படியாக, கிணற்றுப் பாசனத்திலே சாகுபடி செய்பவர்களுக்கு தண்டத் தீர்வை போடப்படுகிறது. கிணற்றுப்பாசனத்துக்கு எவ்வளவு தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம், எவ்வளவு கிணற்று நிலம் சேர்க்கப்பட்டிருக்கிறது, நெல் கரும்பு போக எவ்வளவு வெள்ளாண்மை செய்யலாம் என்று விவசாயிகளுக்கு பின்னால்தான் தகவல் கிடைக்கிறது. – அதற்கு